**மதுரை:** மதுரை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் கடுமையான இயக்கத்திறன் பாதித்த குழந்தைகளுக்கான நடுநிலைப் பள்ளி மற்றும் பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்பு பள்ளிகளில் மாதம் ரூ.12 ஆயிரம் மதிப்பூதியம் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர், துணை விடுதிகாப்பாளர் பணியிடங்கள் அரசு விதிப்படி நிரப்பப்பட உள்ளது. இதற்கு பின்வரும் தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம்.இடைநிலை ஆசிரியர் பட்டயப்பயிற்சி (டி.டி.எட்.,), ஜூனியர் டிப்ளமோ இன் டீச்சிங் பார் VI அல்லது டி.எட்., (சிறப்பு கல்வி) முடித்தவராக இருக்க வேண்டும். இத்தகுதியுள்ளோர், எண்:572, கே.கே.நகர், மதுரை- 625 020, என்ற முகவரிக்கு ஜன.,30க்குள் நேரடியாக அல்லது தபால் மூலமாக விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் சங்கீதா தெரிவித்துள்ளார்.